*ஈரான்*

# சன்னி மதத் தலைவரின் சகோதரர் தூக்கிலிடப்பட்டார்

ஈரானில் ஷியா முஸ்லிம்கள் தான் பெரும் அளவில் வசிக்கிறார்கள். அந்த நாட்டில் சிறுபான்மையினராக சன்னி முஸ்லிம்கள். அவர்கள் ஜுனுல்லா என்ற அமைப்பை நடத்தி வருகிறார்கள். இவர்கள் பாகிஸ்தான் எல்லையோரத்தில் இருந்து ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஈரான் இராணுவம் மீது தாக்குதல் நடத்தி பல இராணுவ தளபதிகளை கொன்றுள்ளனர். இந்த இயக்கத்தின் தலைவர் அப்துல் மாலிக் ரிகி கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டார். அவரது சகோதரர் அப்துல்




ஹமீது ரிகியும் இந்த இயக்கத்தில் இருக்கிறார். அவரும் கடந்த ஆண்டு பிடிபட்டார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அவரை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு தூக்கு தண்டனை விதித்தது. இந்த தண்டனை கடந்த ஆண்டு யூலை மாதமே நிறைவேற்றப்படுவதாக இருந்தது. பிறகு அது டிசம்பர் மாதத்துக்கு தள்ளிவைக்கப்பட்டது. டிசம்பர் மாதம் மீண்டும் அது தள்ளிவைக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த திங்களன்று அவருக்கான தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது. தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மக்கள் முன் தண்டனை நிறைவேற்றப்படுகின்றபோதும், இவர் சகேடான் நகரில் உள்ள சிறையில் தூக்கிலிடப்பட்டார். இத்துடன், இந்த வருடம் மட்டும் 67 பேர் ஈரானில் தூக்கிலிடப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு 270 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

*அவுஸ்திரேலியா*

# இஸ்ரேலிய தூதரை வெளியேற்றப்போவதாக அறிவிப்பு

அவுஸ்திரேலியாவின் கடவுச்சீட்டுகளை இஸ்ரேல் போலியாக தயாரித்து அவற்றை பயன்படுத்தி துபாயில் தங்கி இருந்த ஹமாஸ் தலைவர் ஒருவரை கொலை செய்தமை அந்நாட்டுடன் அவுஸ்திரேலிய உறவு பாதிக்கப்பட்டுள்ளது. பாலஸ்தீனத்தின் தீவிரவாத இயக்கமான ஹமாஸ் தலைவர்களில் ஒருவர் மக்மூத் அல் மபூக், துபாயில் கடந்த ஜனவரி மாதம் 2ம் திகதி இஸ்ரேல் உளவுப்படை முகவர்களால் கொல்லப்பட்டார். இவரைக் கொலை செய்வதற்காக இஸ்ரேல் உளவுப்படையினர் சில நாடுகளின் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதில் அவுஸ்திரேலியக் கடவுச்சீட்டும் அடங்கும்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு நாட்டின் கடவுச்சீட்டுகளை இன்னொரு நாடு தவறாக பயன்படுத்துவதை யாராலும் தாங்கிக்கொள்ள முடியாது. நாங்கள் இஸ்ரேலின் நண்பர்கள். ஆனால் நண்பர்களாக இருக்கும் ஒரு நாட்டின் கடவுச்சீட்டை தவறாக பயன்படுத்துவது எப்படி நட்பு செயலாக இருக்க முடியும்? இஸ்ரேல் நடந்து கொண்ட விதம் வருத்தத்துக்கு உரியதாகும். இதை கண்டிக்கும் வகையில் நாங்கள் இஸ்ரேல் நாட்டு தூதர் ஒருவரை வெளியேற்றுவோம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்.



*இஸ்ரேல்*

# இராணுவ இரகசியம் திருடிய பெண்ணிடம் மீண்டும் விசாரணை

இஸ்ரேலில் இராணுவ இரகசியங்களைத் திருடியது தொடர்பாக அனத் காம் (23) என்ற பெண் விசாரணைக்காக கடந்த திங்கள்கிழமை நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அவர் மீது இரகசியங்களை வெளியிட்டது, நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தியது என இரண்டு குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு ஒரு குற்றத்திற்கு ஆயுள் தண்டனையும், இன்னொரு குற்றத்திற்கு 15 வருட சிறைத் தண்டனையும் வழங்கப்படலாம் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக கடந்த 5 மாதங்களாக வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த காம், நீதிமன்ற விசாரணைக்காக டெல் அவிவ் மாவட்ட நீதிமன்றத்திற்கு கடந்த திங்களன்று அழைத்து வரப்பட்டார். அப்போது அவர் கூறுகையில், 'இஸ்ரேல் இராணுவத்தின் கொள்கைகளை, பாலஸ்தீனியர் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலேயே நான் இவ்வாறு செய்தேன்` என்று குறிப்பிட்டார். முன்னதாக, 2005 முதல் 2007 வரை இஸ்ரேல் இராணுவத்தில் பணியாற்றிய போது, இராணுவ செயல்பாடுகள், தளவாடங்கள் உள்ளிட்ட 2 ஆயிரம் முக்கிய ஆவணங்களைத் திருடியதாக அனத் காம் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

*உகண்டா*

# ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டால் மரண தண்டனை

ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டால் மரண தண்டனை வழங்க உகாண்டா அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது. சில நாடுகளில் ஓரின சேர்க்கையில் ஈடுபடுவோர் திருமணம் செய்து கொள்ளவும் சட்டபூர்வமாக அனுமதிக்கப்படுகிறது. சில நாடுகள் இந்த விடயத்தில் எந்த நிலையையும் எடுக்காமல் அமைதி காத்து வருகின்றன. இந் நிலையில் ஆபிரிக்க நாடான உகண்டாவில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டால் மரண தண்டனை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை அங்கு ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோருக்கு சிறை தண்டனை, அபராதம் போன்றவை விதிக்கப்பட்டு வந்தது. இப்போது மரண தண்டனை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, தென் ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள மலாவி நாட்டில் ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த தடையை மீறி ஸ்டீபன் மொன் ஜேசா (26), திவோன்ஜி சிம்பலங்கா (20) ஆகிய இரு ஆண்களும் திருமணம் செய்து கொண்டனர். கடந்த டிசம்பர் மாதம் உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் பாரம்பரிய முறைப்படி இந்த திருமணம் நடந்தது. ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணத்துக்கு தடை இருப்பதால் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது வழக்கு நடந்து வந்தது. அவர்கள் இருவருக்கும் தலா 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தலைமை நீதிபதி நியாக்வாவா உசிவா தீர்ப்பளித்தார். 'தடையை மீறி ஓரினச்சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொண்டது தொடர்பாக இது தான் முதல் வழக்கு. மிக மோசமான முதல் வழக்கும் இது தான். பின்வரும் சந்ததியினர் இவர்களைப் பார்த்து கெட்டுப் போகக்கூடாது என்று அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது`` என்று நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். மலாவி நாட்டின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

